# துகளறுபோதம்.

திருவாவடுதுறையாதீனம்.
1952

உ

# ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனர்

## குருபூசை நாள்

**730.**

**நந்தன - ஐப்பசி - சுவாதி**

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS
15 OCT 1957
MADRAS



இருபத்தொராவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள்

திருவாவடுதுறையாதீன வெளியீடு - 58

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# துகளறுபோதம்.

( பொழிப்புரையுடன் )

---

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து
இருபத்தொராவது குருமஹாசந்நிதானம்
**ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக சுவாமிகள்**
கட்டளையிட்டருளியபடி

அவ்வாதீன வித்துவான்
**த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையால்**
பரிசோதித்துப் பதிப்பிக்கப்பட்டது.

---

மெய்கண்டார்யாண்டு 730.

நந்தன
ஐப்பசி - சுவாதி.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

துகளறுபோதம் என்பது துகள் அறுதற்கு ஏதுவாகிய போதம் என்க. துகள் - குற்றம்: அஃது உயிர்க்குற்றம்: அஃது ஆணவமலம். எனவே, தொல்லைமலம் அறுதற்கு ஏதுவாகிய சிவஞானத்தை விளைவிக்கும் நூல் என்பதே இத்தொடரின் திரண்ட பொருளாம். ஈண்டு, சிவஞானத்தைப் பயப்பிக்கும் நூலுக்கு ஆயினமையின் இது காரியவாகு பெயர். துகளறுபோதம் அடையடுத்த ஆகுபெயர்: திருவாசகம் என்பது போல.

இனி, திருக்கயிலாய பரம்பரைத் திருநந்திமரபு, ஸ்ரீ மெய்கண்டதேவருடைய சந்தானத்திலே உபதேச பரம்பரையில் வந்த சீகாழிச் சிற்றம்பலநாடிகள் என்னும் ஞானகுரவரால் இத்துகளறுபோதம் என்னும் ஞான நூல் அருளிச்செய்யப்பட்டது. இந்த ஞானசாரியராகிய ஸ்ரீ சிற்றம்பலநாடிகள் என்னும் பெரியார் ஸ்ரீ கங்கை மெய்கண்டாருடைய திருவருளுபதேசம் பெற்றவர்கள். இருவகைத் துறவுமுடையவர்கள். ஒரு நொடியில் தமது சீடராகிய அறுபது முனிவர்கட்கும் அழகிய திருச்சிற்றம்பலமுடையாரது எடுத்த பொற்பாதத்தையடைந்து இன்புற்றிருக்கத் திருவருள்புரிந்த பெருமையினையுடைய தேசிக சிகாமணி இவர்கள். இதனைச் சிறப்புப்பாயிரம் உணர்த்தும்.

இந்நூல் காப்புச் செய்யுளுடன் 101 - திருவெண்பாக்களை உடையது. இத்திருவெண்பாக்களெல்லாம் எளிய, இனிய, ஆற்றொழுக்கான நடையினையுடையன, சிவஞான விளைவைப் பெரிதும் அநுபவத்திற் கூட்டுவன. இவ்வாதீன குலதெய்வமெனப் பெரியோரனைவரானும் போற்றப் பெற்றுவரும், திராவிடமாபாடிய கர்த்தராகிய ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் தாமருளிய உரையில் இந்நூலைச் சில இடங்களில் பரமப்பிரமாணமாக எடுத்தாண்டிருக்கிறார்கள். இதனானே இந்நூல் எத்துணைப்

பெருஞ்சிறப்புடைய பிரமாணமுடைத்தெனத் தெள்ளிதில் விளங்கும். சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய சாத்திரங்களை முறையானே ஓதியுணரும் சிவபுண்ணியப் பேறு வாய்க்கப்பெறும் மெய்யன்பர்களுக்குத் **திருஞானசாகரம், சதமணிக்கோவை** முதலிய ஞான நூல்கள் துணைசெய்வது போலவே இத் துகளறுபோத நூலும் பெரிதுந் துணைசெய்யும் என்பதில் ஐயமில்லை. இவ்வரிய ஞானநூலுக்கு ஓர் பொழிப்புரை இவ்வாதீனத்துப் பெரியோர்களுள் ஒருவர் செய்துவைத்துள்ளனர். அப்பெரியோர் யாவர் எனத் தெளிதற்குரிய சாதனங்கள் இதுவரை கிடைக்கவில்லை. இனிச் செய்யும் ஆராய்ச்சியால் திருவருள்கூட்டக் கிடைக்கும் என்னும் துணிபும் உடையேன்.

இந்நூலுரையும், சதமணிக்கோவை பொழிப்புரையும், திருஞானசாகரம் மூலமும் மற்றும்பல ஞான நூல்களும் தொகுத்துள்ள ஏட்டுச்சுவடிகள் இரண்டு இவ்வாதீனத்துக் கல்விக் களஞ்சியமாகிய சரஸ்வதிமஹால் புத்தகசாலையில் கிடைத்தன. அவற்றைப் பிரதிசெய்துகொண்டு முன்பு என்னிடமுள்ள பிரதியுடன் வைத்து ஒப்புநோக்கப் பல திருத்தங்கள் கிடைத்தன. என்கைப் புத்தகக் காகிதப் பிரதியில் அத்திருத்தங்களைக் குறித்துக்கொண்டேன். பின்பு இவ்வாதீன வித்துவானாக இருந்தவர்களும், இவ்வாதீனத்திலே முறையாகப்பெற்ற தமிழ்க் கல்வியை சிதம்பரம் ஸ்ரீ மீனாட்சி தமிழ்க் காலேஜிலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் முறையே பிரின்சிபாலாகவும், தமிழாசிரியராகவுமிருந்து, பல நன்மாணவர்கட்குச் சிறந்த முறையிலே எளிதில் ஊட்டிச் சிறந்துவிளங்கிய வித்துவசிகாமணியும் ஆகிய ஸ்ரீ சு. பொன்னோதுவா மூர்த்திகள் ஏட்டுச் சுவடிகளையும் பார்த்துக் கிடைத்த சிறந்த திருத்தங்களையும் சேர்த்து வைத்துக்கொண்டேன். இவைகளைப் பற்றிய செய்திகளைத் தரிசிக்குந்தோறும் . ஸ்ரீ திருமாளிகைத்தேவர் சந்நிதியிலும். ஸ்ரீ பஞ்சாக்கர பரமாசாரிய மூர்த்திகள் சந்நிதியிலும் விண்ணப்பம் செய்துவந்தேன். வேண்டுவார் வேண்டுவதே ஈயும் பிரத்தியட்ச தெய்வங்களாக இவ்வாதீனத்தில் விளங்கும் அம்மூர்த்தி

களுடைய திருவருள் வாய்ப்புப் பெருகுவதாயிற்று. அதனால், பன்னெடுங்காலமாகப் பாதுகாத்துக் கல்விக் களஞ்சியத்திலே வைக்கப்பட்டிருந்த பழஞ்சுவடிகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அச்சுவாகனத்தில் ஏறித் தமிழக முழுவதும் உள்ள கற்றோர்க்கும் மற்றோர்க்கும் பயன்படுவனவாக ஊர்தோறுஞ் சென்று சென்று உலாவருதலைக் கண்டார் பேரறிஞரும் பிறரும். 'திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் தெய்வச் செந்தமிழ்நாட்டுக்குச் சென்ற பன்னூறு ஆண்டுகளாக இடையறாது செய்துவரும் சித்தாந்த சைவச்செந்தமிழ்த் தொண்டுகள் எத்துணைப்பல, எத்துணைப் பயனுடையன' என வியப்புற்று 'இவ்வாதீனம் வாழ்வதாகுக' என வாழ்த்துரைகளை மனமாரப் புலவர் பெருமக்கள் வழங்குவதையும் அவர் கேட்டு மகிழ்ந்தார். பிறர் மனமகிழ்ந்து செல்வதையே குறிக்கோளாகக் கொண்டு வாரி வாரிவழங்கும் கொடைத்திறத்தைப் பரம்பரையே பெற்ற **இவ்வாதீனத்து இருபத்தோராவது குருமஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் பெருங்கருணையுடன்** 'இவ்வரிய நூலையும் உரிய உரையுடன் அச்சிட்டு வெளிப்படுத்துக' எனக் கட்டளையிட்டருளினார்கள். அவர்களுடைய இகப்பருமிகப் பெருங்கருணையால் இன்று ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனாருடைய திருநட்சத்திரமாகிய ஐப்பசி-சுவாதியில் இரண்டு நூல்கள் இவ்வாதீன உரைகளுடன் அச்சிட்டு வழங்கப்படுகின்றன. ஒன்று இருபா இருபது; மற்றொன்று இத்துகளறு போதம் என்பது. சென்ற ஆண்டிலே மெய்கண்ட சாத்திரங்களில் 1 திருவுந்தியார், 2 திருக்களிற்றுப்படியார் ஆகிய இவ்விரு நூல்களும் ஸ்ரீ மெய்கண்டதேவர் சந்நிதியில் திருவெண்ணெய் நல்லூரில் வழங்கப்பெற்றன.

இப்பதிப்பில் என் அறியாமையால் நேர்ந்த குற்றங்களைப் பெரிதும் மன்னித்தருளப் பெரியோரை வேண்டுகின்றேன்.

**உரிமை பதிவுசெய்யப் பெற்றது.**

*இங்ஙனம்,*
*சித்தாந்த சைவமணி,*

*திருவாவடுதுறை,*
19—10—52.

**த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை,**
ஆதீனவித்துவான்.

## செய்யுள் முதற்குறிப்பு அகராதி.


அஞ்சுவகையா 23
அஞ்செழுத்தும் 82
அண்ணலுமானந்த 76
அந்தக்கரணம் 15
அந்தச்சுகத்து 63
அந்தமலம் அறுத்தி 100
அந்தமலமாம் 30
அந்தமனத்தாலே 91
அந்தஅருள் 36
அந்தஅறிவும்அறி 43
அலகுதிருமெழுக் 98
அறிந்தறிந்து 35
அறியும்அறிவு 34
அறிவடையச் 52
அறிவார்க்கறிவித் 44
அன்றிவந்த 24
அன்றுமுதலாக 87
அன்றுமுதல்இன் 38
அன்றேதொடங்கி 65
ஆகமுதல்நீங் 85
ஆகம்உயிர்பொரு 86
ஆனஅதனால் 18
ஆனபரமானந்த 68
இச்சைஉயிர்க்கி 41
இந்தச்சுகத்தில் 57
இந்தச்சுகம் 75
இந்தஇருள் 29
இப்படியேபூத 10
இப்பரிசே 21
இரந்தரமாய் 8
இருட்கும்ஒளிக்கு 33
இரவுபகல்நிழல் 84
இவ்வறிவுகாண்ட 50
ஈசனறிவாகி 51
உற்றசரியை 2
உற்றபரமானந்த 80
உன்னறிவைநீயே 39
உன்னறிவுக்குள் 40
எங்கும்நிறைந் 77
எத்திசையும்ஒன் 48
எல்லாங்கழற்றி 3
எல்லாங்கழன்ற 59
எல்லாம்பொய்யென்றி 37
எல்லாம்பொய் - காப்பு
ஒன்றிரண்டுமூன்று 81
ஒன்றுஞ்சுகவடிவு 58
ஒன்றுந்தெரியா 26
கண்டஇடமெல்லா 78
கண்ணில்இருள் 32
கருவிகரணங் 27
கருவேலைதன்னை 89
காலநியதி 17
கிரியைஅறிவிச் 42
கொன்றையந்தார் 99
சத்தாதி 12
சர்க்கரைதான் 73
சன்மார்க்கம்ஈதா 90
சாற்றில் அதற்கு 62
சுத்தவித்தை 19
சுத்திஐந்து 94
சோராமற்பூசி 96
தாதமார்க்கஞ் 97
துன்பமற்ற 55
தேடப்பிரித்துத் 7
தேனூறும்இன்பச் 56
நாவாரிரதமது 74
நின்றஅறிவறி 49
நின்றஒளியுரு 92
நின்றநிலைசிவமாய் 64
நின்றுநின்று 22
நின்றபரமானந்த 71
நீங்காதபேரறி 47
நீயுஞ்சிவமுமாய் 61
நீர்க்குயிராய் 5
பகலிழந்த 25
பதிபசுபாசங் 1
பரமபரமானந்தம் 79
பருகத்தொலையா 72
பற்றிநின்ற 83
பாசம்பசுபதியை 88
பார்க்கரியஇந்த 66
பாராதேஅந்த 70
பார்த்ததிருமேனி 95
பூதமிடமாய்ப் 11
புத்திரமார்க்கம் 93
பையஇருந்து 53
பெற்றருந்தி 67
பொங்குபுல 16
மண்ணுக்குயிரா 4
மண்முதலாம் 20
மன்னும்மகாரம் 14
வட்டம்அறு 9
வன்னிக்குயிரா 6
வாக்காதி 13
வானில்இரவி 28
வானகத்தில் 60
விண்ணிற்கதி 45
விண்ணில்விகற்ப 46
விழுந்தஅவதர 54
விளைந்தபரமானந்த 69
வைத்தஅவதர 31


21-வது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக சுவாமிகள் திருவருள்

நீடு வாழ்க!

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிறப்புப்பாயிரம்.

திருவருள் விளையுந் திறம்பல வெனினும்
ஒருவகை யிருபத் தெட்டுடன் பிறவும்
ஆமவை பூதம் ஐந்தின் பழிப்பே
தாமிட மாகச் சார்பொறி யறுத்தல்
ஏழுவளி முயற்சியி னியைந்திடும் பொருள்களிற்
சூழல்வுறு மந்தக் கரண சுத்தியும்
பலகுணம் விடுக்கும் பகுதியைத் தோற்றும்
கலைமுத லேழும் கழன்ற நிலையும்
சுத்த தத்துவ தூடண மைந்தும்
தத்துவா தீதமுஞ் சார்முத்திச் சகலமும்
சகல தெரிசனந் தானருட் கேவலம்
திகழ்கே வலத்தின் தெரிசன மதீதம்
தன்னுண்மை யோடு சைதன்னிய தெரிசனம்
என்னும் பன்மூன் றெனவரு மவத்தையும்
உரைதரு ஞான தெரிசனத் தோடும்
பரைதெரி சனமே பரையில் வியாத்தி
நிருமல சாக்கிரஞ் சாக்கிரா தீதம்
பகர்சுத் தாவத் தைசுக ரூபத்
தோடு சொல்சுகா தீதம் பகர்சிவப்
பேறு பரமா னந்த தெரிசனம்
பரமா னந்த யோகம் போகம்
பரமா னந்த மேலீ டவசம்

ஆனவிப் பதினொந் தவத்தை கூடத்
தானெழு நான்கெனச் சாற்றிய பின்னர்
அஞ்செழுத் தியல்பும் அருளாந் தேசிகர்
தஞ்சிறப் பறிந்து சாரும் புதல்வர்
அவர்பணி நிற்றலு மாதியி லியற்றும்
தவநெறி மூன்றுஞ் சதமெனு மளவில்
துகளறு போதச் சுருதியிற் சென்ற
அகலிடத் தவருக் கருள்கூர்ந் துரைத்தனன்
கங்கைமெய் கண்ட கடவுளர் கருணையின்
இங்கெமக் கருளிய விறையோ னிருவகைத்
துறவும் பூண்ட தோன்றலோர் கணத்தின்
அறுபது முனிவர்க் கழகிய மன்றுள்
ஆடிய பாத மருள்சிற் றம்பல
நாடி யென்றுயர் ஞானதே சிகனே.

துகளறுபோதம் சிறப்புப் பாயிரம் முற்றிற்று.

---

பாயிர மூன்றும் பூத மேழும்
பொறியின் மூன்றுங் கரணங் கலாதி
சுத்த தத்துவந் தத்துவா தீதம்
சகலங் கேவலந் தெரிசன மதீதம்
தன்னுண்மை யாக வொன்பது மிரண்டாம்
சைதன்னிய மூன்றும் ஞான மாறும்
பரையி னுலும் வியாத்த மொன்றும்
யோக மொன்றும் சாக்கிர மிரண்டும்
அதீத மொன்றும் பரையா தீதம்
இரண்டுஞ் சுத்த வவத்தை யொன்றும்
சுகசொ ரூப நாலு மதீதம்
இரண்டுஞ் சிவப்பே றுறும் பரமா
னந்த நாலும் யோக மிரண்டும்
போக மஞ்சு மூன்றுமே வீடாம்

அவச மிரண்டு மணுவு மட்சரம்
குருத்துதி சீடன் முத்தன் குருவழி
திருமேனி யருமை குருவே குருபணி
அதுவது வொன்றும் யோக மூன்றும்
கிரியை நாலும் சரியை மூன்றும்
ஆக நூரு யறைந்தனர் போதம். (1)

அந்தவா ருயிர்தனக் கறிவின் வியாத்தி
தந்தது ஞான சத்திய தாகும்
முழுதுநின் றுணர்த்து மூவகைச் சத்தியும்
நழுவிநின் றிடுவது ஞானா தீதம்
புணர்ந்தவல் லிருளினைப் புரைபுரை தொறுஞ்சென்
றுணர்ந்திடு மறிவாத்ம ரூபம தாகும்
கேவல வல்லிருள் கீழ்ப்படத் தான்முழு
தாவதே யாத்ம தெரிசன மாகும்
நயந்திடு மிச்சா ஞானக் கிரியையில்
பயின்றிடா நிலையது பரைதெரி சனமே
திரைப்படு பரையினிற் சேதன வியாபகப்
பரப்பினைக் [காண்ப]து பரையின் வியாத்தி
விரவிய பரையினில் வியாபகத் துடனுயிர்
பரவிநின் றிடுவது பரையினில் யோகம்
ஆங்குறு பரையி னநுபவ நிலைமையைப்
பாங்குறப் பெறுவது பரைதனிற் போகம்
முறைபரை யோக முழுப்பரை சாக்கிரம்
தற்பரை போகஞ் சாக்கிரா தீதம்
ஓர்ந்திட நின்ற வுணர்வது முழுவதும்
சோர்ந்திட லாத்ம சுத்திய தாகும்
இருள்கெடக் கதிரொளி யெழுந்தது போலுளத்
தருளெழ வாணவ மகன்றது மிவனே
அறிவக லதீதத் தநுபவஞ் சிறிதாங்
குறுவது வேசுக ரூபம தாகும்
ஆன்றவச் சுகத்துக் காதார மாங்குணி
தோன்றநிற் பதுவே சுகாதீத மாகும்
அகண்டமுஞ் சுகவடி வாஞ்சிவ மயமெனச்
சகந்தனைக் காண்பது தான்சிவ ரூபம்
எங்குங் கலந்த விறைவனைந் தொழிலையும்
அங்கங் கறிவ தாஞ்சிவ தெரிசனம்
மருளதி கார மலமகன் றிடவே
அருளது மேவிடு மவதர மிவனே

அற்புத வருளா லத்துவி தம்பெறச்
சிற்பரத் திசைவது சிவயோக மாகும்
நற்பர சிவத்துற நண்ணுத லின்பம்
சிற்பரா னந்த தெரிசன மாகும்
பெறுபரா னந்தப் பெருக்கினிற் கலந்தாங்
குறுவதா னந்த யோகம தாகும்
அருந்துமா னந்த வவசமே வீடு
பொருந்திய நிலைசிவ போகம தாகும்
மெய்யுறு சமாதியை விடுத்துமவ் வருளினுள்
அவையகங் காண்பது மறிதருங் களங்கம
துறவுறு மவித்தைதற் கவித்தல விளங்கிப்
பிரம விளையாட் டிது காட்சியே. (2)

சாக்கிரம்பத் தொன்பது கனவு தானொன்று
தூக்குசுழி யொன்று துரியமெட்டு — நீக்கித்
துரியாதீ தம்மொன்று சுத்தவத்தை முப்பான்
சரியித் துகளறுபோ தம். (3)

சாக்கிரந்தா னீராறு சார்சொப் பனமாறு
நீக்குஞ் சுழுத்தியொன்று நேர்துரிய — நோக்கி
ஒருமூன் றதீதந்தா னோராறு நாலேழ்
தருமே துகளறுபோ தம். (4)

— இவை நாலு பாட்டானும் பேதங்களுணர்ந்தறிக.

ஸ்ரீ மெய்கண்டதேவர் மிளிர்கழல் வாழ்க.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சீகாழிச் சிற்றம்பலநாடிகள்

அருளிச்செய்த

# துகளறுபோதம்.

காப்பு.

எல்லாம்பொய் என்றே எனைக்காட்டி எம்பிரான்
சொல்லாத பேரறிவு தான்சொல்லி—நல்லதொரு
அற்புதமாம் ஆனந்தம் ஆங்கருத்தல் செப்புதற்குக்
கற்பகத்தின் தாளிணையென் கண்.

## நூல்.

பாயிரம்.

பதிபசு பாசந் தெரிந்தந்தப் பாச
விதிவழியை வென்றதனின் வேரும்—கதிவழங்கும்
மெய்கண்டான் சந்தான மேவிச் சிவானந்தங்
கைகண்டார் காணார் கரு. (1)

**இதன் பொருள் :—** பதி பசு பாசங்களாகிய முப்பொருள்களின் இயல்பையும் தெரிவித்து, அவற்றுள் பாசத்திறைல் உளதாகிய ஊழ்வினையை வெல்வித்து, திருவடிப் பேருகிய முத்தி

இன்பத்தைத் தந்தருளும் ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனருடைய சந்தானத்தையடைந்து அவ் வாசிரியருக்கு அடிமைப்படுவா ராயின் சிவானந்தத்தை எளிதிலே பெறுவர். மீண்டும் பிறப் பிறப்புக்களை அடையார். (எ—று)

இது முதல் மூன்று செய்யுட்களும் பாயிரம். முதனூ லாசிரியர் வணக்கம் இச்செய்யுளாற் கூறப்படுகிறது.

*உற்ற சரியை ஒழியாத நற்கிரியை*
*குற்றமில்லா யோகக் குறிநெறியும் — முற்றிப்*
*பிறந்தார்கள் தாமறியப் பேசுகேன் அன்றிப்*
*பிறந்தார் அறியாத பேறு.* (2)

**(இ-ள்)** முற்பிறப்புக்களில் சரியை கிரியா யோகம் என் னும் சிவ புண்ணியங்களைச் செய்து முதிர்ச்சியடைந்த பேர் களாய்ப் பிறந்த பக்குவர்களுக்கு இந்நூல் உரியதேயன்றி ஏனையோருக்கு உரியதன்று. (எ—று)

இந்நூலுக்கு அதிகாரி இவர் என்றது இச்செய்யுள்.

*எல்லாங் கழற்றி இறைவ னுடன்கலக்க*
*வல்லார்கள் சொன்ன வழிபலவும் — சொல்லரிய*
*தம்பிரான் ஆகமத்திற் சாற்றும் அவதாரமும்*
*எம்பிரான் தந்தான் எமக்கு.* (3)

**(இ-ள்)** மும்மலங்களினுடைய வாதனை தீர்ந்து சாயுச்சிய மோட்சம் பெறும்படிக்கு ஆன்றோர் அறிந்த விரகினையும், இரண்டறக் கலந்த வழியும் முதல்வன் வழிபாட்டின் நீங்காத ப்யிற்சியையும் எம்பெருமானாகிய ஸ்ரீ மெய்கண்ட சிவம் இழிந்த நாயினுங் கடைப்பட்ட எமக்கும் நல்கியருளியது. (எ—று)

இந்நூலுக்கு முதனூல் இது என்றது இச்செய்யுள்.

## பூதப்பழிப்பு.

மண்ணுக் குயிராகி வந்தூரத்துத் தான்தரிக்கும்
எண்ணும்உரோ மாதிஇதன் காரியமாம் — கண்ணிற்
பிறவுங் கடினமாய்ப் பேசியதுந் தானும்
துறவுமுதற் பூதத் தொழில். (4)

(இ—ள்) மண் கடினமாய் எவ்வற்றையும் தாங்கும். இதன் காரியம் மயிர் எலும்பு முதலியனவும் பிற வலிய பொருள்களு மாம். (எ—று)

நீர்க்குயிராய் நின்றே நெகிழ்ந்து குளிருமே
பார்க்கில்நீ ராதி பகர்கருமம் — கார்க்குரிய
வெள்ள முதலாகுமா மெய்யுணரின் அப்புத்தான்
அள்ள விடப்படா தாம். (5)

(இ—ள்) நீர் நெகிழ்ந்த குணத்தைச் செய்தலும் தண் ணென்று இருத்தலுமாம். மேகத்தால் தரப்படுவதும் அதுவே. (எ—று)

வன்னிக் குயிராகி வந்துசுட்டிங் கொன்றுவிக்கும்
பன்னுபசி யாதி பயில்கருமம் — மன்னும்
விளக்காகிப் பந்தமாய் வேறுகி நிற்கும்
துளக்கமிலாத் தேயுத் தொழில். (6)

(இ—ள்) தீச் சுடுதலும் பசித்தலும் ஆம். விளக்காகவும் பந்தமாகவும் காணப்படும். (எ—று)

தேடப் பிரித்துத் திரட்டுவிக்கும் செய்கருமம்
ஓடல்முத லோவா உயிர்மருந்து — நாடில்இவை
யல்லவாம் வாயு அருட்குருவாற் காண்பதன் றிச்
சொல்லவா ராதே துணிந்து. (7)

(இ—ள்) வாயு ஓரிடத்திலுள்ள பொருளைப் பலவிடத்தும் சிதறச் செய்யும். எப்பொருளையும் ஒன்றாய் ஒருங்கே திரட்டும். ஓடல், எழும்பல், வீழ்தல், நிமிர்தல் முதலியன இதன் தொழில். இதன் உருக்காண வாராது. எனினும், ஆசிரியர் உபதேசத்தா னன்றிக் கூறவும் இயலாது. (எ—று)

*இரந்தரமாய் நின்றே இடங்கொடுக்கும் வானம்*
*பரந்த குரோதமுதற் பார்க்கில் — விரிந்த*
*கருமமாய் வேருகுங் காணலாம் உண்மைக்*
*குரவனு லென்றே குறி.* (8)

(இ—ள்) ஆகாயம் ஏனை நான்கு பூதங்களுக்கும் இடந்தந்து வெளியாயிருக்கும். குரோதம் முதலியன இதன் தொழில். இதுவும் குரு உபதேசத்தான் அறியத்தக்கது. இதனை, "மண் கடின மாய்த்தரிக்கும் வாரிகுளிர்ந் தேபதமாம், ஒண் கனல்சுட் டொன்றுவிக்கும் ஓவாமல்—வண்கால், பரந்துசலித் துத்திரட் டும் பாக்கிலா காயம், நிரந்தரமாய் நிற்கும் நிறைந்து." என்னும் உண்மை விளக்கச் செய்யுளான் அறிக. (எ—று)

*வட்டம் அறுகோணம் மாயாத முக்கோணம்*
*இட்ட பிறைசதுர மேவடிவம் — எட்டரிய*
*வேதன்மால் மிக்க விடையோன் மகேசனுடன்*
*ஆதி அதிதெய்வ மாம்.* (9)

(இ—ள்) ஆகாயம் வட்டமாயிருக்கும், வாயு அறுகோண மாம், தீ முக்கோண வடிவாம், நீர் பிறை வடிவாம், மண் நாற் கோண வடிவாம். பிருதிவிக்குப் பிரமனும், அப்புவுக்குத் திருமாலும், தேயுவுக்கு உருத்திரனும், வாயுவுக்கு மகேச்சுரனும், ஆகாயத்திற்குச் சதாசிவனும் அதிதெய்வங்களாம். (எ—று)

'வட்டமறுகோணம்' என்பதை எதிர் நிரல் நிறையாகப் பிருதிவியாதியோடு இயைக்க. இன்றேல் மாறும்." மண்புனல்

அனல்கால் வான்பால் வடிவுநாற்கோண மாகும். தண்பிறை மூன்று கோணம் தகுமறு கோணம் வட்டம்'' என்பது சிவ ஞான சித்தியார். "நாற்கோணம் பூமிபுனல் நண்ணுமதி யின் பாதி, ஏற்குமனல் முக்கோணம் எப்போதும் — ஆர்க்கும், அறு கோணம் கால்வட்டம் ஆகாயம் ஆன்மா, உறுகாய மாமிவற்ருல் உற்று'' என்பது உண்மை விளக்கம்.

*இப்படியே பூதத் தியல்பு தனைத்தெளிந்தே*
*அப்படிநீ யல்லாமல் ஆங்கறிந்திட் — டெப்படியுந்*
*தோன்ருமல் தேசிகன்ருன் சொன்னபடி கண்டிருந்தால்*
*ஊன்ரு யதுவாம் உடம்பு.* (10)

**(இ-ள்)** இவ்வாறு கூறப்பட்ட பூதங்கள் உனக்கு வேருய் இயல்புடையன. இதனை ஐயந்திரிபறத் தெளிவாயாக. உன்னின் வேருகவுள்ள அவைகளை உன்னுடையன எனக் கருதிய அறி யாமை நீங்கி அவற்றின் வேருக உன்னைக் காண்பாயாக. ஞாஞ சாரியார் அருளிய உபதேசத்தால் அவற்றை நன்கு அறிந்தாயா யின் இம்மக்கட் பிறவி பயனுடைத்தாம் என்க. (எ—று)

### பொறியறவுணர்தல்.

*பூத மிடமாய்ப் பொருந்தும் பொறிபுலன்கள்*
*நாதனரு ளாலேநீ நாடியவை — ஏதமெனத்*
*தத்தம் உருவுணரத் தான்அகலும் அப்போதே*
*சத்தமுத லாதிவிடும் தான்.* (11)

**(இ-ள்)** பஞ்சபூத பரிணமமாகிய உடம்பினிடத்துப் பொறி புலன்களின் இயல்பை உபதேச வாயிலாக அறிந்து அவை துன்பம் தருவன என உணர்ந்தால் அவை தாமே அகலும். அகன்ற அந்நிலையில் சத்த முதலிய தன்மாத்திரையளவே தோன்றுவனவாம். (எ—று)

*சத்தாதி யைந்தினையுஞ் சந்தித்து நீஅகல*
*அத்தால் வரும்பயன்கள் ஆங்ககலும் — எத்தாலும்*
*காணுமல் அவ்விடயங் கைகழலக் கைகழலும்*
*நாணுப் பிறப்பின் நவை.* (12)

(இ—ள்) அந்தச் சத்தமுதலாகிய தன்மாத்திரைகளை ஒட்டியறிந்து அவற்றின் நீங்க அவற்ருல் உளவாகும் துன்பமும் நீங்கும். அவை நீங்கப் பிறப்பும் நீங்கும். (எ—று)

சத்தாதி ஐந்தாவன : சத்த பரிச ரூப ரச கந்தம் என்பன.

*வாக்காதி அத்துடனே நீங்கவச ஞதிவிடும்*
*நீக்காத உட்கரணம் நீங்குமே — தாக்கி*
*மனது முதலாக வந்தவந்த போது*
*தனது செயலுணரத் தான்.* (13)

(இ—ள்) ஞானேந்திரியங்களாகிய அவை நீங்கக் கன்மேந்திரியங்களும் உடன் நீங்குவனவாம்: பின்பு வசன முதலியனவும் நீங்கும். அதன்பின் அந்தக்கரணங்கள் மனத்தை வாயிலாகக் கொண்டு தாக்கும். அப்போது ஆன்மா தன்னியல்பையறிந்து ஒழியவேண்டும். (எ—று)

### அந்தக்கரண சுத்தி.

*மன்னும் மகாரம் மனஞ்செலுத்தும் புத்தியினை*
*உன்னும் உகாரம் உபகரிக்கும் — முன்ஞகும்*
*ஆங்காரந் தன்னை அகாரம் செலுத்தியிடும்*
*நீங்காத சித்தம்விந்து நேர்.* (14)

(இ—ள்) மனம், புத்தி, அகங்காரம், சித்தம் முதலிய அகக்கருவிகளை முறையே மகாரம், உகாரம், அகாரம், விந்து முதலியன நின்று செலுத்தும். (எ—று) இதனை, "அகார வுகார மகங்காரம் புத்தி, மகார மனஞ்சித்தம் விந்து — பகாதிவற்றை,

நாத முளவடிவா ஙாடிற் பிரணவமாம், போதங் கடற்றிரையே போன்று" என்பது சிவஞானபோதம் உதாரண வெண்பா. சிவஞான போதம், சிவஞான சித்தியாருக்கு ஸ்ரீ மாதவச் சிவ ஞான யோகிகள் அருளிய உரை நோக்கியறிக. பழையவுரையும் நோக்குக.

*அந்தக் கரணம் அகல அதிற்கூடுந்*
*தொந்தக் கலாதித் துரிசறுமே — பந்திக்குஞ்*
*சித்த மலமறுத்துத் தீர உனக்கேற*
*ஒத்த படியே உணர்.* (15)

**(இ—ள்)** அந்தக் கரண வினையகல அவற்றை வேறு வேறு செலுத்தும் கலைகளால் உளதாகும் மாசு அகலும். பந்தஞ் செய்யும் சித்தத்தின்கட் பொருந்திய மயக்கைத் துவர அறுத்த நிலையிலே நின்றிடுக. (எ—று)

## கலாதிஞான நிராகரணம்.

*பொங்கு புலனருந்தப் போதந் தருமாயை*
*தங்குகலை யாதி தருஞானம் — இங்கிதனை*
*நீங்குபடி மாணவக நின்போதம் ஒன்றிரண்டு*
*தூங்குபடி நில்லாய் துணிந்து.* (16)

**(இ—ள்)** விடயநுகர்ச்சி பெறுமாறு உயிருக்கு அறிவை எழுப்பும் மாயையால் தரப்படும் கலாதிஞானத்தின் நீங்குமாறு அறிவு இச்சை தொழில் என்னும் மூன்றும் வாளாதிருக்க நிற்பாயாக. (எ—று) கலையாதி : கலை, நியதி, காலம் என்பன.

*கால நியதி கலையாதி தத்துவங்கள்*
*சாலஅறி விச்சைதொழில் தானழுத்தல் — மூலமாம்*
*மாயை மயக்கல் வரைத்தல் வினைகூட்ட*
*லாயவிட லாமென் றறி.* (17)

4

(இ-ள்) காலம் நியதி கலைகளுக்கு முறையே தொழில் இச்சை அறிவுகளாம். இவற்றிற்கு முதலான மாயையின் தொழில்கள் உயிருக்கு அறிவை மயக்குதலும் அதனைத் தநு முதலியவற்றால் வரம்பு படுத்துதலும் இருவினைப்பயன்களை நுகர்வித்தலுமாம். ஆகலான், இவையெல்லாம் விடத்தக்கன வாம் என்று அறிவாயாக. (எ—று)

காலம் நியதி கலைகளுக்கு அறிவு இச்சை தொழில்கள் எதிர் நிரல்நிறையாம்.

## சுத்தத்துவ தூடணம்

*ஆன அதனால் அழுந்தினால் ஆசதற்கேன்*
*ஈன வயிந்தவத்தின் எல்லைகாண் — ஊனமிலாப்*
*போகந் தருமானாற் பொல்லாதோ புண்ணியத்தின்*
*ஆகந் துணையானார்க் காம்.* (18)

(இ-ள்) அறிவு விளக்கத்திற்கு ஒருதலையாக இன்றியமை யாததாயிருப்பினும் வைந்தவம் என்னும் சுத்தமாயையும் பந்தத் திற்கு ஏதுவாயிருத்தலின் அதனை ஒருவாது அதன்பாற் படுதல் இழுக்குடைத்தாம். (எ—று)

"வித்தைகள் வித்தை யீசர் சதாசிவ ரென்றிவர்க்கு —
வைத்துறும் பதங்கள் வன்னம் புவனங்கள்" முதலியவற் றிற்கு முதற் காரணமாயிருத்தல் பற்றி 'புண்ணியத்தினாகந் துணையானார்க்காம் வைந்தவம்" என்றார் என்க.

*சுத்தவித்தை யாதிமுதற் சொன்னஏழ் தத்துவமும்*
*ஒத்து நடத்திவிடும் ஓவாமல் — வித்தைசெயல்*
*ஏறிக் குறைந்தொத்தல் எப்போதும் பார்த்திடவே*
*மாறிப் பிறந்தனு மாறு.* (19)

(இ—ள்) சுத்தவித்தை யாதியாவன முன்விதந்தோதிய தத்துவங்கள் ஏழையும் ஒழியாமல் இயக்குவனவாம். வித்தியா தத்துவத்தின் தோற்றவொடுக்கங்களின் முறைமை யறிவார்க்குப் பவநெறியைக் கடத்தல் கூடும். (எ—று)

சுத்தவித்தையாதியாவன : சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்பன.

வித்தியாதத்துவம் ஏழாவன : காலம், நியதி, வித்தை, கலை, இராகம், புருடன், மாயை என்பன.

## தத்துவாதீதம்.

*மண்முதலாம் நாதாந்த மாய்வந்த தத்துவத்தின்*
*உண்மையறிந் தெல்லாம் ஒழிந்தாயே — எண்ணில்இவை*
*தத்துவா தீதமெனச் சாற்றுங்காண் சைவமறை*
*அத்துவா எல்லாம் அற.* (20)

(இ—ள்) நிலம் முதல் நாதம் ஈருகிய தத்துவங்கள் முப்பத்தாறின் இயல்பெல்லாம் உள்ளவாறு உணர்ந்து கழித்தவிடத்துத் தோன்றுவது, இவற்றையெல்லாம் கடந்ததாய் அத்துவாக்களையும் இறந்ததாய்ச் சைவமறைக்கண் விளங்குவதாயுள்ள சுத்த சிவம் என்றுரைப்பாம். (எ—று)

அத்துவாக்களாவன: மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்னும் ஆறுமாம். மந்திரம் சோரியாகவும், பதம் நரம்பாகவும், வன்னம் தோலாகவும், புவனம் மயிராகவும், தத்துவம் என்பும் தசையுமாகவுங் கொண்டு: சாந்தியாதீத கலை திருமுடியாகவும், சாந்திகலை திருமுகமாகவும், வித்தியாகலை மார்பாகவும், பிரதிட்டாகலை குய்யமாகவும், நிவிர்த்திகலை முழந்தாளும் பாதமுமாகவும் உறுப்புக்களையுடையனுய் இறைவர் திருமேனி கொண்டருளுவர் என்க. "வைத்ததா மத்துவாவும் வடிவென மறைகளெல்லாம்" என்பது சிவஞானசித்தியார்.

இப்பரிசே ஐந்துசுத்தி எய்தியதால் எப்போதும்
செப்பரிய மாயாதி தீருமே — அப்பரிசே
ஆங்கவற்றி ஞேடே அழியும் வினைமலந்தான்
நீங்கவற்ரூ நீங்கா நிலை. (21)

(இ-ள்) இங்ஙனம் ஐந்து சுத்தியும் எய்துவார்க்கு மாயா மலப் பிணிப்பு நீங்கும். அது நீங்கவே கன்ம மலமும் உடன் நீங்கும். எஞ்சியுள்ள ஆணவ மலம் நீங்குதற்கரிய நிலையினை யுடைத்து. (எ—று)

ஐந்து சுத்திகளாவன : பூதப்பழிப்பு, பொறியறவுணர்தல், அந்தக்கரணசுத்தி, கலாதிஞான நிராகரணம், சுத்த தத்துவ தூடணம் என முற்கிளந்தோதியனவாம் என்க.

## சகல தரிசனம்.

நின்றுநின்று வந்த நிலைதோறும் நீஅறிந்த
தன்றிஅவை தன்னை அகன்ருயே — இன்றிவைதான்
முத்தி படுஞ்சகலம் முன்னம் படுஞ்சகலம்
பெத்தமது வென்றுநீ பேசு. (22)

(இ-ள்) அவத்தைகடோறும் படிந்து அதுவதுவாய் நின்ற தன்றி நீ அவற்றை அகன்றிலை. அவ்வவத்தைகள்தாம் யாவை என்பையாயின் முத்திச்சகலம், சகலசகலம், கேவல சகலம் என்பனவாம். (எ—று)

அஞ்சு வகையாக ஆருறும் நீத்ததற்பின்
விஞ்சிவரும் ஆணவத்தின் மேலீடு — வஞ்சமறச்
சாற்றில்அது கேவலமாம் தான்கழித்துப் போந்தநிலை
சாற்றில் அதுசகலந் தான். (23)

(இ-ள்) கேவலாவத்தை எனப்படுவது பஞ்சசுத்தி வாயிலாக முப்பத்தாறு தத்துவங்களேயும் நீத்து ஆணவமலத்தின் மேற்படுவதாம். அதனேயுங் கழித்துப் போந்த நிலேயே சகலமாம். (எ—று)

ஆணவத்தின் மேலீடாவது: ஆணவத்தை ஆதாரமாகக் கொள்வதென்க.

## கேவலம்.

*அன்றிவந்த தத்துவங்க ளெல்லாம் அகன்றிடவே*
*ஒன்றிநின்ற ஆணவந்தான் ஒன்றுமே — என்றுந்தான்*
*நீங்கா இருள்விழிபோல் நிற்குமே ஆன்மாவும்*
*பாங்காக ஆங்கே பதிந்து.* (24)

(இ-ள்) மாறுபட்ட தத்துவங்களெல்லாம் நீங்கப் பொருந்திய ஆணவத்தின்கண் ஆன்மா நிற்குமுறைமை நள்ளிருட்கண் விழி விளக்கமறுதல் போலும் என்க. (எ—று)

அன்றிவந்த - மாறுபட்ட, இதனே, 'அன்றினர்புரம்' என வருந் திருவாக்கானுணர்க. இருளின்கண்விழி அவ்விருளுமாகாது அவ்விருளின் வேறுமாகாது. அதனல், தன் இச்சை ஞானக் கிரியைகள் மறைக்கப்பட்டு நிற்கும் எனவுணர்க.

*பகலிழந்த வான்போற் பரவுமலம் நீயாய்*
*இகலறவே நின்ருய் இழந்தாய் — அகலறிவு*
*வாடாத முத்தியினில் வாய்த்தஅருட் கேவலம்நீ*
*நாடாத கேவலமுன் னுள்.* (25)

(இ-ள்) ஞாயிறில்லாத வான் இருள் வயத்ததாமாறுபோல மிக்கு நிகழும் மலத்தின் வயத்தையாய் நின் அறிவையிழந்த கேவல நிலேயே இறைவனரது திருவருளினலே, பெறும் முத்தி நிலேயை நீ எய்தாமற் செய்ததற்குக் காரணமாம். (எ—று)

## கேவல தரிசனம்.

*ஒன்றுந் தெரியா ஒழியா இருளாகி*
*இன்றளவும் நின்ற திதுவோதான் — ஒன்றாகிச்*
*செம்பிற் களிம்புபோற் சேர்ந்துநின்ற ஆணவந்தான்*
*அம்புநிழற் போலென் றறி.* (26)

(இ—ள்) செம்புங் களிம்பும்போல் அநாதியே ஆன்மாவைப் பற்றியிருக்கும் ஆணவமலம் நீரின்நிழல் போல் புலப்பட்டுத் தோன்றுதலின்றித் தெரியா ஒழியா இருளாகி இன்றளவும் நின்றது. (எ—று)

*கருவி கரணங் கழன்றுங் கழலா*
*இருளின் பெருமையிது என்னோ — இருள்தான்*
*விடிகைக் கிருண்ட மிகுதிபோல் மாசு*
*மடிகைக் கிருண்டதுகாண் மற்று.* 27)

(இ—ள்) கருவி கரணம் முதலிய வெல்லாம் நீத்தும் கழலாத ஆணவ இருளின் பெருக்கத்தை யாங்ஙனம் நீத்துமோவென அஞ்சற்க. புலரிக்காலைக்குமுன் பக்கத்தில் இருள்செறிந்து பின் வீதல்போல அதுவும் தேய்ந்து இறுதற்கு அங்ஙனம் பெருகிற்று ஆதலான். (எ—று)

## கேவலாதீதம்

*வானில் இரவிவர வல்லிருள்போ மாறுபால்*
*ஈன இருள்அகல்வ தெக்காலம் — மானே*
*அறிந்தாய் இருளென் றறியாமை தன்னைப்*
*பிறிந்தாயோ இல்லையோ பேசு.* (28)

(இ—ள்) ஞாயிறு விளக்கத்தின்கண் இருளிரிதல்போல என்னைப்பற்றிய ஆணவ இருள் நீங்குவது எஞ்ஞான்று என அஞ்சற்க. அறியாமை என்றறிந்தபோதே நீ அதைப்பிரிந்தாய் ஆகலான். (எ—று)

மானே - மகடூஉமுன்னிலை. அறியாமை வயப்பட்டுப் பகுத்தறியாதிருந்த நிலையே ஆணவத்தோடு ஒன்றுபட்டிருந்த தற்குக் கரியாம்: ஆணவத்தைத் தன்னின் வேறாக அறியும் நிலையே அதனைத் தான் விலகியதற்கு அறிகரியாம் என்க.

*இந்த இருள்ஒழிய ஏதும்நான் காண்கிலேன்*
*இந்த இருள்அகல்வ தெப்படியோ — இந்த*
*அறியாமை நின்றால் அதனைநீ காணாய்*
*அறியா தறிந்தனையோ அன்று.* (29)

(இ-ள்) அறியாமையை யொழிய வேறு ஒன்றனையும் நான் காண்கிலனால் என்று அஞ்சற்க. அறியாமையேயாக நின்றாயாயின் நீ அறியாமை என்பதொன்றுண்டு என்றுந் தெளியாய். அவ்வாறின்றி அறிதலான் நீ அதனின் வேறாயினாய் என்க. (எ—று)

### தன்னுண்மை.

*அந்த மலமாம் அறியாமை கண்டாயே*
*அந்த அறிவுநீ ஐயனே — தொந்தஇருள்*
*போனதே உன்னைவிடப் போக்கித் திரோதையரு*
*ளானதே கண்டாய் அறி.* (30)

(இ-ள்) சித்தாந்தவுணர்ச்சி பெற்றதனால் தலைமைப்பாடுடைய மாணவகனே! நீ வேறல்லை. அறியாமை என்பதொன்றுண்டு என்று எவ்வறிவினாற் கண்டாய்? அவ்வறிவுதான் நீ என்று உணர்வாயாக. அற்றேல் அஃதாக, என்னைப் பற்றிய ஆணவ இருள் நீங்கியதாயின் பின்னும் யான் மறைப்புண்டிருத்தல் என்னை? என்பையேல், அவ்வாணவ இருளையும் போக்கி நினக்கு இறையனார் அருளைப் பயப்பிக்கும் திரோதாயி சத்தியின் மறைப் பென்றதனை அறிவாயாக. (எ—று)

வைத்த அவதரங்க ளெல்லாம் உடன்வந்தும்
அத்தகைமை கண்டும் அறியாயால் — முத்தனுய்ப்
பாச அறிவும் பதியறிவு மன்றியே
ஆசறவே நின்றவன்நீ யாம். (31)

(இ—ள்) முற்கிளந்த தத்துவங்களின் வழியிலெல்லாம் வந்து அவற்றின் இயல்பெல்லாம் அறிந்தும் அறியாதாய் போலப் பேசுகிருய், மாணவகனே! நின் அறிவு என்னையெனின், மறைக்கும் இயல்பினதாய பாச அறிவும் அல்ல, அன்றி, எவற்றையும் விளக்கும் இயல்பினதாய பதியறிவுமல்ல, இவ்விரண்டினும் வேருன அறிவித்தால் அறியும் இயல்புடைய பசு அறிவு என்று அறிவாயாக. (எ—று)

## சைதன்னிய தரிசனம்.

கண்ணில்இருள் போனுலும் கண்தன்னைக் காணுபோல்
எண்ணும்இருள் போனுல் எனைஅறிய — வொண்ணுதோ
கண்போற் சடமோநீ காட்டியதுங் கண்டறிந்த
ஒண்போவும் நீயென் றுணர். (32)

(இ—ள்) கண்ணை மறைத்த இருள் கெடினும் கண்ணனது தன்னைக் காணுதவாறுபோல என்னைப் பிணித்த ஆணவ இருள் அகன்றழியும் யான் என்னைக் காணுதல் செல்லாது என்று எண்ணற்க, நீ அக் கண்ணைப்போல் சடப்பொருள் அல்லை: ஆகலானும், இறையனுர் விளக்கியாங்குக் காணும் அறிவினையுடையை ஆகலானும் என்க. (எ—று)

இருட்கும் ஒளிக்கும் இடமாகும் வான்போல்
அருட்கும் மருட்கும் அகமாய்ச் — சுருக்கமிலா
நீசத் தசத்தன்று நேரே சதசத்த
னுய்சத் ததுவ்சத்த தாம். (33)

**(இ-ள்)** ஆகாயம் ஒன்றே இருள் ஒளி இரண்டற்கும் இடனுமாறு போல நீயும் இறையனுர் அருட்டிறத்தையும் பாசத்தின் மருட்டிறத்தையும் ஏற்கும் கொள்கலம் ஆயினை. ஆயின், நீ ஏற்ற அந்தச் சத்தாகிய அருளுமல்லை, அசத்தாகிய மருளுமல்லை; இருந்தவாற்ருல் சத்தாம் இயல்பையும் அசத்தாம் இயல்பையும் ஒட்டி நிற்கும் சதசத்தின் இலக்கணம் உடையை. (எ—று)

இருள் ஒளிகட்கு இடனும் ஆகாயம் அவ்விருளொளிகளும் ஆகாது அவற்றின் வேறுமாகாது நிற்றல்போல, சதசத்து எனப்படும் உயிரும் பதிபாசங்களும் ஆகாது அவற்றின் வேறுமாகாது நிற்கும் இயல்பினதாம். வான், இருளில் இருளாயும் அது கழிந்துழித்தோன்றும் ஒளியில் ஒளியாயும் நிற்பதன்றித் தனித்து நிற்கும் தனிமுதல் அல்லாதவாறுபோலப் பாசத்தோடு நிற்புழிப் பாசமாயும் அகன்றுழி விளங்குவதாய் உள்ள சிவானந்தப் பெருஞ்செல்வத்துள் திளைப்புழி அதுவாயும் நிற்பதன்றி உயிர் தனித்து நிற்கும் ஆற்றலுடைத்தன்று. இதுவே உயிரியல்பாம் என்க. இக்கருத்தை ''இருதிற னறிவுள திரண்டலா வான்மா'' என முதனூலிற்கூறிய ஆன்ம இலக்கணத்தின் வைத்துக் கண்டு கொள்க.

*அறியும் அறிவுநீ யன்றோ உனக்குச்*
*செறியுமலம் நின்றதோ செப்பாய் — அறிவுதனைப்*
*பாராதே பார்த்தறிந்து பாசப் பழக்கமதில்*
*வாராத தன்றோ வழக்கு.* (34)

**(இ-ள்)** அறிவிக்க அறியும் இயல்பினையான நீ நின் இயல்பை நின் அறிவால் முனைத்துக்காணுதலின்றி இறையனுர் அருள்வழிக் கண்டு பாசப் பழக்கத்திலே பட்டுப் பிறப்பின்கண் வாராது உஞற்றுதலன்றே நீதியாம். (எ—று)

இங்ஙனம் உஞற்றுவார்க்கு அது எளிதில் நீங்கும் என வினவுதன் முகத்தான் மாணாக்கனை ஊக்கமுறுத்தியது இது.

## ஞான தரிசனம்.

*அறிந்தறிந்து வந்த அவதாரங்கள் தோறுஞ்*
*செறிந்தறிய நின்றதெது தேரின் — பிறிந்ததனின்*
*நின்ற தறியாமல் நிகழ்த்தியது நீக்கிஉனை*
*இன்றறிய வைத்ததருள் என்.* (35)

(இ—ள்) நீ மயக்கமதுற்று மருந்திற் றெளிந்து தெளிந்து வருந்தொறும் பிரிவற நின்று உணர்த்தி வந்தது எது? என ஆராய்வார்க்கு அநாதியே உன்னையாத்த பாச இருளை நீக்கி, அது நீங்கிய நிலையும் நீ அறியாவாறு புரிந்து, இன்று தன்னையும் அறிய வைத்த இறையனார் அருள் என்பது இனிது விளங்கும். (எ—று)

*அந்த அருள்உனக்கிங் காதார மாய்அல்லின்*
*இந்து வெனஎறித்திட் டேகமாய் — முந்தி*
*உனைஉனக்குத் தான்விளக்கி ஓவா துணர்த்தும்*
*தனை உனக்குக் காட்டுமே தான்.* (36)

(இ—ள்) அவ்வருள் நின் உயிருக்கு ஒப்பற்ற களைகணாய் நின்று இரவிருளைத் திங்கட்புத்தேள் இரித்து ஒளிவிடுமாறுபோல அறிவை விளக்கி முதலாக உன்னை உனக்குக் காட்டிப் பின்பு தன்னையும் காட்டும். (எ—று)

*எல்லாம்பொய் என்றிங் கிருந்தேனும் நானன்றே*
*நல்லாய் எனைஅறிந்தேன் நானன்றே — சொல்லாடும்*
*நான்பிரம மன்றி நடுவே உணர்த்துதற்கு*
*வான்பிரமம் உள்ளதோ மற்று.* (37)

(இ—ள்) நானே பிரமம் ஆவதன்றி என்னை உணர்த்துதற்கு என்னின் மேலான வேறொரு பிரமம் உளதோ? என்று கூறி எல்லாப் பொருள்களையும் பொய் என்று உரைத்துக்கொண்

டிருந்த புழுத்த நாயினும் கடையன் ஆகிய தீயேனும் உய்யுமாறு திருவருள் பாலித்ததன்றோ? (எ—று)

ஈண்டு இந்நூலாசிரியர் இறையனார் அருளால் தமக்கெய்திய கேடில் உதவியின் இயல்பை மாணக்கர்க்கு அறிவுறுத்தார். நானே பிரமம் என்று உரைக்கும் நிலை பிறப்பைப் பயத்தற்கு ஏதுவான செருக்கைப் பெருக்குதலான் அது சாலவும் வழுக்குடைய நெறி என்பது புலப்படுத்துவாராயினர்.

*அன்றுமுதல் இன்றளவும் அண்ணல்அறி விப்பதன்றி*
*இன்றறிவேன் நான்என் றியம்புவதென் — என்றும்*
*அவத்தை தனில்உணர்த்தி ஆங்கருத்தி இன்றித்*
*தவத்தில் உணர்த்தினர்ஆர் தான்.* (38)

**(இ-ள்)** ஆணவ மலத்தினின்றும் எடுத்துவிட்ட காலம் முதல் இம் முத்திக்காலம் வரையில் உணர்த்துவான் இறைவன் என்று உணர்ந்து உரையாது நானே அறிவேன் என்று உரைப்பது. அவத்தையில் இன்பத்துன்பங்களை யருத்தி உணர்த்தி யாங்கு இன்று சிவாநந்தப் பெருஞ் செல்வத்தை யடைதற்குக் கருவியான தவத்திற் புகுதவிட்டார் இனையர் என்று அறிய மாட்டா மடமையே யாம். (எ—று)

*உன்அறிவை நீயே உணர்வையே யாமாகில்*
*இந்நெடுநாட் பாசத் தியையாயே — உன்அறிவை*
*நீங்கா அறிவாகி நீரும் இரதமும்போல்*
*ஆங்காண் அரனர் அருள்.* (39)

**(இ-ள்)** அற்றன்றி. நீயே நின் அறிவைக் காண்பாய் எனின், இதுகாறும் பாச வலைப்பட்டு நீ அறிவு மாழ்குதற்கு ஏது இன்று. ஆதலான், உன் அறிவை விளக்குவதாயுள்ள இறையனார் அருட்சத்தி நீரும் அதன்கட் சுவையும்போல நின் அறிவைப் பொருந்தியிருக்கும். (எ—று)

### பரையில் வியாத்தம்.

*விண்ணிற் கதிரோன் விளங்கி விரிந்ததுபோல்*
*கண்ணிற் கதிரோன் கலந்ததுபோல் — நண்ணிப்*
*பரைநிறைவில் நீயும் பதிவையே யாகில்*
*உரையிறந்திட் டொன்ருவை யுற்று.* (45)

(இ—ள்) ஞாயிறு விண்ணில் விரிந்ததுபோலவும், கண்ணும் கதிரும் வேருயினும் ஒன்ருமாறுபோலவும் சத்தியொடும் பேதாபேதமாய் உயிர் நிற்குமாம். (எ—று)

### பரையில் யோகமும் போகமும்.

*விண்ணில் விகற்பமற மேவியகால் நின்றதுபோல்*
*நண்ணும் பரையதனில் நண்ணியே — எண்ணிறந்து*
*நீர்உறங்குந் தன்மைபோல் நிற்கைபரை யோகம்அதிற்*
*சீருறலே போகமெனச் செப்பு.* (46)

(இ—ள்) ஆகாயத்தில் இயங்காது ஒருபடித்தாகத் தங்கிய காற்றுப் போலப் பராசத்தி வியாபகத்தில் நண்ணி நீர்ஒழுகி நிலைத்தல் போல் பரவிநின்றறிவது பரையில் யோகம் எனப்படும். அப் பராசத்தியின் அநுபவ நிலையை எய்தி இன்புறுதலே பரையிற் போகம் எனப்படும். (எ—று)

ஒரு வியாபகப் பொருளில் பிறிதொரு பொருள் வியாபித்து நிற்குமாற்றிற்கு விண்ணிற்கால் நிற்பது உவமையாம். அங்ஙனம் வியாபகமுறப் பரவி அசைவின்றி நிற்கும் முறைமைக்கு நீர் உறங்குவது உவமையாம். உறங்குதல் - ஈண்டுமெல்ல ஒழுகிப் பரந்து அசைவின்றி நிற்றல்.

### சுத்தபராயோகமும் சாக்கிரமும்.

*நீங்காத போறிவு நீங்காமற் கண்டநீ*
*நீங்காமல் நின்றபடி நின்றதனின் — நீங்காமல்*

நின்றுவிட லன்றோதான் நின்மலன்தன் பேரறிவில்
ஒன்றுபடல் என்னும் உரை. (47)

(இ-ள்) இவ்வியல்பால் நிற்றல்தான் இறையனார் திருவடி ஞானத்தில் இரண்டறக் கலக்கும் முறையாம். (எ—று)

எத்திசையும் ஒன்றும் இறையறிவி லேஅழுந்தல்
சுத்தபரா யோகமெனச் சொல்லுமே — நித்தமறை
அத்தன்மை கண்டால் அதுமுத்தி சாக்கிரமாம்
சித்த மயல்அறவே தேர். (48)

(இ-ள்) இறையனார் ஞானமாகிய சுத்த பராசத்தியிலுறல் சுத்த பரையோகமாம். அங்ஙனமுற்று அதனைக் கண்டிருத்தல் சாக்கிரமாம். (எ—று)

## சாக்கிராதீதம்.

நின்ற அறிவறிகை நீங்காமை சாக்கிரமாம்
அன்றி அவிழ்தல் அதீதமாம் — சென்றறிவை
நீங்காமை நின்று நெடிது துயில்கொளவே
வாங்கா தறிவாய் வா. (49)

(இ-ள்) அங்ஙனம் கண்டிருந்து அறிவு விரிதலே சாக்கிரா தீதம் என்று அறியற்பாற்று. அதில் நீங்காமல் தூங்குவார்க்குப் பரையில் அதீதம் எய்தும் உணர்வும் எளிதின் எய்தும். (எ—று)

## பரையிலதீதம்.

இவ்வறிவு காண்டல் இருள்தீருஞ் சாக்கிரமாம்
அவ்வறிவு காணா ததீதமாம் — இவ்விரண்டும்
பாராமல் நிற்றல் பரையி லதீதமாம்
ஆரா அறிவகன்ற தால். (50)

(இ-ள்) முற்கூறிய சாக்கிரம் அதீதம் என்னும் இரண்டையும் கடந்து அவற்றை அறியாது நிற்றல் பரையிலதீதம். ஈண்டே ஆணவவிருளகன்று முழு அறிவும் விரிந்ததாம். (எ—று)

*ஈசனறி வாகிஎல்லாம் இன்று கழன்றகன்றாய்*
*பாசம்மிக வைத்ததனிற் பற்றாதே — கூசாமல்*
*நேராக நீங்கிஅதில் நின்ற சுவடறவே*
*வாராய் சிவமேல் வர.* (51)

(இ-ள்) பதிஞானத்தை எய்துதலான் ஐந்துமலத்தினின்றும் நீங்கிய நீ பயிற்சி வயத்தான் ஒரோவழி அதனைப் பற்றவுங்கூடும் ஆதலான் அங்ஙனம் ஆகாமைப் பொருட்டுச் சிவத்தைக் கலைகளைக் கோடற்பாற்று என்க. (எ—று)

## சுத்தாவத்தை.

*அறிவடையச் சென்றங் கதீதமாய் நின்ற*
*குறியிறந்திட் டொன்றுங் குறியா — நெறியேது*
*சுத்தவத்தை மைந்தாஉன் தொல்லைமலம் இல்லைஇல்லை*
*அத்துடனே செல்வதது வாம்.* (52)

(இ-ள்) அடையச் சென்று, இறந்திட்டு, குறியாநெறி ஏது அது சுத்தாவத்தை என்று அறிவாயாக. ஈண்டு மலமில்லை என்பது திண்ணம். சுகரூபமாவது "அறிவகல் அதீதத் தநுபவம் சிறிதாங்குறுவது" என்றறிக. (எ—று)

## சுகரூபம்.

*பைய இருந்து பதைப்பற்ற பின்உனக்குத்*
*தூய்ய சுகப்பிரபை தோன்றுமே — ஐயனே*
*கண்டாய் சிவபூமி காட்சி யறக்கலந்து*
*கொண்டாள்வன் கண்டாய் குறித்து.* (53)

(இ—ள்) அங்ஙனம் இருப்பாய்க்குத் தூய இன்பச் சுடர் தோன்றும்; தோன்றுங்கால், அவ்வின்பத்தைப் பயக்கும் சிவத்தைக்கண்டு பிரிவறக் குறிக்கொண்டு அதனொடு கலந்திருப்பாயாக. (எ—று)

*விழுந்த அவதரத்தில் விஞ்சு சுகந்தான்*
*எழுந்ததிது எங்கே இறைவா — மொழிந்தருளாய்*
*மாமணியிற் சோதி மலர்ந்த பிரபைபோல்*
*ஆம்அரன்தன் பாலே அது.* (54)

(இ—ள்) முற்கிளந்த இன்பம் யாண்டெழுவது என்பையாயின் இறைவன்மாட்டு மணியின் ஒளிபோல வெளிப்படுவது என அறிவாயாக, எனவே, இறைவனும் அவன்மாட்டு எழூஉம் இன்பமும் குணகுணித் தன்மையவாம் என்க. (எ—று)

*துன்பமற்ற இந்தச் சுகப்பிரபை தன்னையே*
*இன்பசத்தி என்றறிநீ எப்போதும் — அன்புறவே*
*நின்றதிலே ஆறி நிலாவு நிலாவும்போல்*
*மன்றல் தரமணந்து வாழ்.* (55)

(இ—ள்) இத்தகைய ஆனந்தவொளியை இறைவனுக்கோர் சத்தி என்றுணர்ந்து அதில் நிலவும் நிலவும் கலந்தாற்போல் கூடி வாழ்வாயாக. (எ—று)

நிலா உவமை ஒன்றுபட்டிருத்தல் மாத்திரைக்கே கூறியதென்றுணர்க.

*தேனூறும் இன்பச் சிவவடிவம் இப்படியோ*
*வானோர் காணாத மன்னவனே — ஞானா*
*இதுவும் ஒருசத்தி இறைவர்க்கதானால்*
*எதுமுத்தி சொல்லாய் இனி.* (56)

(இ—ள்) இன்பத்தின் பெற்றி இதுவாயின், ஞானச் செல்வத்தையுடைய எனதாசிரியரே! இதுவும் இறைவனுக்கு ஒரு ஞான சத்தியாய் முடிதலின் இதனி னூங்குப் பெறுவதாகிய முத்தி இதுவென்று அறிவுறுத்தருளுக. (எ—று)

## சுகாதீதம்.

*இந்தச் சுகத்தில் இனிநீ விழியாமல்*
*அந்த அறிவின் அயர்ந்ததுபோல் — தொந்தமறப்*
*போதாய் இதுவே சுகாதீதம் பொய்யற்றோர்க்*
*காதார மான அருள்.* (57)

(இ—ள்) மேலெல்லாம் வந்த ஞானங்களை மறந்தாங்குச் சுகரூபமாகிய இதனினும் நீ விழித்துப் பாராது அதன்பால் தொடர்பறப் போதுவாயாக. அங்ஙனம் போது நெறியே மெய்ப்பொருள் கண்டார்க்குக் களைகணுவது. (எ—று)

*ஒன்றுஞ் சுகவடிவுக் குள்ளான தம்பிரான்*
*அன்றி ஒருபொருளும் ஆகாதே — நின்றமுந்திச்*
*சொல்லரிய இந்தச் சுகத்துக் கதீதமாய்*
*நில்அவன்தா னாமே நிலை.* (58)

(இ—ள்) ஆனந்தமே தனக்கு வடிவமாகப் பொருந்தி அதற்குள்ளுறையும் தம்பிரானையன்றி ஒரு பொருளும் நிலையுதன்மாலைத்தன்று. ஆகலான், சொல்லுதற்கரிய இச் சுகத்திற்கும் அதீதமான அவன்மாட்டு நிற்பாயாக. (எ—று)

## சிவப்பேறு.

*எல்லாங் கழன்ற இடமே சிவமென்று*
*சொல்லா டுவர்கழன்ற தூயோர்கள் — நல்லாய்கேள்*
*நின்றபடி தானே நிலையா நிலையதனில்*
*நின்றுவிடு நேராக நீ.* (59)

(இ-ள்) இதுகாறும் உரைத்துப்போந்த இவையெல்லாம் கழிந்த நிலயமே சிவமென்று அச்சிவஞானங் கைவந்த பெரியோர் உரைப்பார். ஆதலின், அந்நிலையில் ஒருதலையாக நின்றிடுவாயாக. (எ—று)

*வானகத்தில் வானும் மணத்தில் மணமும்போல்*
*ஆனசுகப் பேற்றில் அழுந்திஅது — தானாகும்*
*ஆண்டகுரு நாதா அடியேன் பெருவாழ்வை*
*மீண்டுசொல உண்டோ விதி.* (60)

(இ-ள்) அத்தகைய இன்பத்தில் அழுந்தியவாற்றிற்கு வானில் வானும், மணத்தில் மணமும் பொருந்திய தொக்கும்; அது நிற்க, அத்துரியாதீதத்தின் கண்ணே சொல்லவேண்டுவன வேறுபிற வுண்டேல் அவற்றையும் அறிவுறுத்தருளுதி: என்னை ஆண்டருளிய ஐயனே என்க. (எ—று)

*நீயுஞ் சிவமுமாய் நின்றாயோ நின்றிலையோ*
*ஆயஅடி யேனோ அதிகாரம் — நாயனே*
*ஒன்றன் றிரண்டன் றிரண்டொன்று தானன்று*
*நின்றதொரு தன்மை நிலை.* (61)

(இ-ள்) தலைமைப் பாடுடைய மாணவகனே! நீ சிவமாகி நின்றாயென்று கூறுதற்கென்? அடியேன் அங்ஙனமாயினேனோ என்று நீ கருதற்க. ஆண்டு நீ ஒன்றுமல்லையாய் இரண்டுமல்லையாய் நின்ற நிலையினையுடையாய். (எ—று)

*சாற்றில் அதற்குவமை தாடலைபோற் சன்மார்க்க*
*வேற்று விதிபலவும் வேண்டாவே — போற்றரிய*
*நித்தனே சுத்தனே நித்தியா னந்தனே*
*அத்தனே முத்தனே ஆங்கு.* (62)

(இ-ள்) முற்போந்த அத்துவிதக் கலப்பிற்குத் தாள் + தலை என்னும் இரண்டு சொற்களும் தம்மிற் கூடித் தாடலை என நிற்பதே உவமையாம். இங்ஙனம் நிற்கும் அம்முத்தி நிலையில் வீடு பேற்றைப் பயப்பனவாய், சன்மார்க்கம் முதலிய ஞான நிலைகளும் ஆண்டு நிகழ்வன அல்ல என்க. (எ—று)

*அந்தச் சுகத்தைக் கதித அவத்தை யென்பர்*
*பந்தமற்ற முத்திப் பயனறியார் — அந்தோ*
*பிறியாத இன்பப் பெருமானைப் பெற்றும்*
*அறியாத வாதனையால் ஆங்கு.* (63)

(இ-ள்) அங்ஙனம் பெற்ற பேரின்ப நிலையையும் முத்திப் பயன் இஃது என்பதையும் அளந்தறியும் ஆற்றலில்லாத மடவோரில் ஒரு சாரார் அஃதனைத்தையும் கடந்துநின்ற அஞ்ஞானம் என்று உரைப்பர். தம்மோடு உடனியைந்த எம்பெருமானைப் பெற்றும் அவனால் எய்தும் அரும்பேறு பெறாத அறியாமை வயப்பட்டுக் கெடுகின்றனர் அவர்: அந்தோ! (எ—று)

இதனால், முத்தியென்பது பிறிதன்று, அதுவும் அஞ்ஞானமே என்றுரைக்கும் மதவாதிகளை மறுத்தருளினார் என்க.

## பரமானந்த தரிசனம்.

*நின்ற நிலைசிவமாய் நின்றாயே நின்மலனும்*
*என்றும் பயனாய் இருந்தானே. — அன்றே*
*அவனுக் கிதமே தவனாகி நின்ற*
*இவனுக் கிதமே தினி.* (64)

(இ-ள்) நின்ற அந்நிலையில் உயிர் சிவமாய் நின்றது. அங்ஙனம் நின்ற சிவனுக்கு ஒருவித இன்பமும் இல்லை. உயிருக்கே இன்பம் என்று அறிவாயாக, (எ—று)

*அன்றே தொடங்கி அனைத்துயிரும் தானுகி*
*ஒன்ருகி நின்றவருக் கின்பூட்டிக் — குன்ருமற்*
*கொண்டுவிட லன்ருேநம் கோமாற் கிதமென்று*
*கண்டுகொள்நீ இந்தக் கருத்து.* (65)

**(இ-ள்)** அற்றேல், இறைவனுக்கு இதமாவதுதான் யாதோ? எனின், அநாதியே எல்லாவுயிர்க்கும் உயிராய் நின்று அவற்றை இயக்கினும் தன்னை ஒன்றி இரண்டறக் கலந்த உயிருக்கு இன்ப மாகிய தடத்து மடையை உடைத்துவிட்டு அருத்துதலே அவற்கு இதமாவதென்று பழைய மறைகள் எல்லாமுரைக்கும். (எ—று)

*பார்க்கரிய இந்தப் பரம சுகந்தன்னைச்*
*சேர்ப்பன்உயிர்க் கென்றிறைவா செப்பினையே — மாற்றரிய*
*ஆனந்தம் ஆருயிர்கட் கண்ணல் அருத்துவது*
*தான்எங்குப் பெற்றவா சாற்று.* (66)

**(இ-ள்)** சுட்டற்ற இவ்வரிய சுகத்தை இறைவன் யாண்டுப் பெற்று உயிரை நுகர்விப்பன்: எம் ஐயனே! அதனை அடி யேனுக்கு விளம்பியருளுக. (எ—று)

*பெற்றருந்தி இன்பம் பிறர்க்கும் அருத்தினனே*
*உற்றபர மானந்தம் உள்ளதோ — மற்றிதுதான்*
*என்றுநீ கேட்கில் இறையுருவம் ஆனந்தம்*
*அன்றிவே றென்றில்லை யாம்.* (67)

**(இ-ள்)** அங்ஙனம் பெற்று அருத்துகின்ருனே? இயல்பி லேயே அவனுக்கு அஃது உள்ளதோ? என்று வினவுவார்க்கு இறைவனது உருவமே இன்பவுருவம் அன்றி வேறல்ல என விடுக்க. (எ—று)

ஆனபர மானந்த மாகின்ற எல்லையே
ஊனமிலா உண்மைதனில் ஒன்றுபடல் — ஈனமறத்
தானென போது தணவா தெழுந்தசுகம்
மானே அதுவா மதி. (68)

(இ-ள்) அதுவே இறைவனோடு ஒன்றுபடுதலால் உண்டாகும் இன்பம். (எ—று)

## பரமானந்த யோகம்.

விளைந்தபர மானந்த வெள்ளந் தனிலே
திளைந்துதிளைந் தாடியதில் தோன்றா — வளைந்துன்னை
நீர்போல் அமிழ்த்தியதன் நீள்நிழல்போல் தான்கரந்து
பார்போல் தரிப்பாகும் பார். (69)

(இ-ள்) பேரின்ப வெள்ளத்திலே நீ உன்னை நீர்ச்சுழிபோல் சுரிந்து அழுத்தி அந்நீர் நிழல் கரந்து தோன்றாமை போல நின் அறிவும் தோன்றாவாறு நிலம்போல் நிலையுதலுற்று. (எ—று) இது குளகச்செய்யுள்.

பாராதே அந்தப் பரம சுகந்தன்னை
நேராகத் தானு நிழல்போலத் — தீராச்
சுபாவம் அதுவாகத் தோன்றிமறை யாதே
அபாவமாய் நில்லாய் அதில். (70)

(இ-ள்) பாராது அதுவாகித் தோன்றி மறையாது அதில் அபாவமாய் நில்லாய். (எ—று)

## பரமானந்த போகம்.

நின்றபர மானந்தம் நேரே அனுபவித்தங்
கொன்றுபட உள்ளுருகி ஓவாமல் — என்றும்

*மதுவுண்ட வண்டுபோல் மாளாச் சுகத்தைப்*
*புதிதுண் டிருந்துவிடிப் போது.* (71)

**(இ-ள்)** அப்பேரின்ப வெள்ளத்திலே தேனையுண்ட வண்டைப்போல் உள்ளுருகி ஓவாமல் புதிது உண்டிருக்க. (எ—று)

மதுவுண்ட வண்டு மயக்கத்தால் தன்னையும், தான் உண்ட தேனையும் அறியாது தேன் பயந்த இன்பவயத்ததாய் இருக்கும். அதுபோலஎன உவமை கொள்க, புதிதாக ஒரு பொருளை நுகர்வார் மிக்க வேட்கையோடு அதை நுகர்வர். ஆதலின், ஈண்டும் அது தோன்றுதற்பொருட்டுப் புதிதுண்டு என்றார் என்க.

*பருகத் தொலையாப் பரபோகந் தன்னை*
*உருகிஅடி யேன்அருந்த ஊட்டும் — குருவே*
*அழியாத இன்பம் அரன்அருந்தான் என்னும்*
*வழிஏது சொல்லீர் மகிழ்ந்து.* (72)

**(இ-ள்)** இவ்வரிய பேரின்பத்தை அடியேனும் நுகருமாறு நுகர்விக்கும் எம் குருநாதனே! அரனார் தம் இன்பத்தைப் பிறருக்கு நுகர்வித்தலின்றித் தாம் நுகரார் என்பது என்னை? (எ—று) இச்செய்யுள் மாணவகன் வினா என்க.

*சர்க்கரைதான் ஆர்க்கும் தரும்இரதம் அவ்விரதம்*
*சர்க்கரைதான் கொள்ளுமோ சாற்றுங்கால்—சர்க்கரைக்கின்*
*றின்புருவ மன்றி எழிலுருவம் வேறுண்டோ*
*இன்புருவமேஇறைக்கும் என்.* (73)

*நாவா ரிரதமது நாஅருந்த லல்லாதிங்*
*காவா இரதம் அறியுமோ — ஓவாப்*
*பரமசுகம் உன்பாற் பலிப்பதே யன்றிப்*
*பரமசுகங் கொள்ளா பயன்.* (74)

இவ்விரண்டு செய்யுட்களும் ஒரு தொடர்.

(இ—ள்) கன்னல் தன்னை நுகர்வார் யாவருக்கும் இனிய சுவையைப் பயத்தல் அல்லது தான் அச்சுவையை அறியாதது போலவும், நாவானது தன்பாற் பொருந்திய பண்டத்தின் சுவையை அறிதலின்றி அப்பண்டம் அச்சுவையை அறியாதவாறு போலவும் பேரானந்தமானது உன்னை உவப்பித்தலன்றித் தனக்கு நிலைக்களமான இறைவனை உவப்பியாதாம் என்க. (எ—று)

கன்னலுக்கு இன்சுவையே உருவாவதன்றி வேறு உருவில்லாமைபோல இறைவனுக்கு உருஇன்பமாகலின்.

*இந்தச் சுகம்ஆன்ம லாப மெனஅறிநீ*
*அந்தச் சுகமொழிந்திங் காராதே — இந்தச்*
*சுகமெலாம் அந்தச் சுகமாக்கில் உன்றன்*
*அகமெலாம் ஆனந்த மாம்.* (75)

(இ—ள்) இங்ஙனம் பெறும் இன்பமே நின் உயிர்க்கு உறுதியான ஊதியமாம். ஆகலான், அதையொழிய வேறுபிற இன்பம் போல் தோற்றுவனவற்றை நுகராமல் இவ்வுலகத்து நீ இன்பம் என நினைக்கும் எல்லாவற்றையும் ஒருவி அந்நினைவெல்லாம் மறுமைக் கண்ணதாய் ஈண்டுக் கூறிய இவ்வின்பத்தில் வைப்பையேல் நின் உள்ளீடெல்லாம் களித்ததற்குக் காரணமான பேரின்பமயமாம் அது. (எ—று)

## பரமானந்த மேலீடு.

*அண்ணலும்ஆ னந்தம் அருளும்ஆ னந்தம்உயிர்*
*எண்ணிலா ஆனந்தம் எவ்வுலகும் — பண்ணி*
*அளித்தழிப்பா ராகும் அவர்களும்ஆ னந்தம்*
*களித்ததுவே எப்போதும் காண்.* (76)

(இ-ள்) அண்ணலும், அருளும், உயிரும், எவ்வுலகும், முத்தொழில் இயற்றும் பிரம விட்டுணு உருத்திராதிகளும் ஆகிய எல்லாம் ஆநந்த ரூபமாக எப்போதும் களிப்பதே அதுவாம். (எ—று)

*எங்குநிறைந் தானந்த மெல்லாம் அமிழ்த்திமிகப்*
*பொங்கிக் கரைபுரண்டு பூரணமாய் — எங்கும்*
*வளைத்த உலகுயிரும் வாய்த்த சுகமாம்*
*அளத்திற் புகுந்ததுபோல் ஆங்கு.* (77)

(இ-ள்) அவ்வின்பம் ஆண்டு நிறைந்து எல்லாப் பொருள்களானும் எய்தும் இன்பத்தை யெல்லாம் தன்கீழ்ப்படுத்தி அதனாலும் அமையாது பொங்கிப் புரண்டு பூரணமாய அம் முத்தியில் சுகமாகிய இடத்தில் உலகுயிர் அனைத்தும் குடிபுக்கனபோல் முற்றியன. (எ—று)

*கண்ட இடமெல்லாம் கருணைக் கடலமுதம்*
*மொண்டுகொள லாய்நிறைந்த முத்திதனைப் — பண்டே*
*திருமால் அயனறியாத் தேசிகனார் பாதம்*
*தருமாம் அடியேற்குத் தான்.* (78)

(இ-ள்) கண்டுழியெல்லாம் கண்டுழியெல்லாம் முகந்து கொள்ளுமாறு கருணையமிழ்து கடலாய் நிறைந்த முத்தியை மாலும் அயனும் அறியா இறையனார் பூம்பதங்கள் புழுத்த நாயினுங் கடையேனாகிய அடியேற்கும் உதவுமாம். (எ—று)

## பரமானந்த அவசம்.

*பரமபர மானந்தம் பார்கீழ்மேல் மற்றும்*
*அரவம்வா ராதே அகலும் — புரணமாய்*
*ஆங்கே அமிழ்ந்தி அவசமாம் ஆனந்தம்*
*நீங்கா ததுவாகி நில்.* (79)

(இ-ள்) அப்பெற்றித்தாகிய பேரின்பத்தை ஓவாது நோக்கு வார்க்கு அது கீழ்மே லிடமெல்லாம் மெல்ல அகன்று நிறையும். நிறைந்துழி ஆங்கு அமிழ்ந்திப் பரவசமாய்ப் பிரியாது நிற்கற் பாற்று. (எ—று)

*உற்றபர மானந்தத் தொன்றாய் அதில்உறங்கி*
*முற்றுவதே முத்திமுடி வென்றுரைக்கும் — குற்றமிலா*
*வைதிக சைவம் வழிநூல் புராணமற்றுஞ்*
*செய்வனநூ லெல்லாம் தெளி.* (80)

(இ-ள்) இங்ஙனம் பேரின்ப வெள்ளத்தில் இரண்டறக் கலந்து திளைத்து உறங்குவதே முடிவான முத்திநிலை யென்று வழுவில்லாத வைதிக சைவநெறி விளக்கும் சிவஞானபோத முதலிய ஞான நூல்களும், அவற்றின் வழிப்படு நூல்களும், புராணங்களும், ஏனைநூல்களும் துணிந்துரைக்கும்: இதனைத் தெளிவாயாக. (எ—று)

அணுவகை.

*ஒன்றிரண்டு மூன்றுமல முள்ளஉயிர் மூவர்க்குஞ்*
*சென்றிவன்போல் நேரே சிவமாகி — நின்றநிலை*
*இவ்வகையே ஆளும் எழிற்குருவாம் ஈசனே*
*அவ்வகையை நீஅங் கறி.* (81)

(இ-ள்) ஆணவமலம் ஒன்றேயுடைய விஞ்ஞானகலர், ஆணவம் காமியம் இரண்டுமுடைய பிரளயாகலர், ஆணவம் காமியம் மாயை இம்மூன்றுமுடைய சகலர் என்னும் இம் முத்திறத்து ஆன்மாக்கட்கும் முறையே உள் நின்றும், முக்கண்ணும் செக்கர்ச் சடையும் கறைக் கண்டமும் மான் மழுவும் உமையம்மையும் பொருந்திய திருவடையாளங்களுடன் எதிர் நின்றும், மக்கள் யாக்கைபோல் வெளிப்பட்டு வந்தும் இவ்வாறு இறைவன் ஞானத்தை உணர்த்தி வீடுபேற்றை யருளுவன்: இஃதை யறிவாயாக. (எ—று)

முன்னர் எடுத்தோதிய உரையிறந்த இன்பத்தைப் பெறு தற்குப் பிறிதுமோர் உபாயம் உணர்த்துதல் நுதலிற்று.

## பஞ்சாக்கர தெரிசனம்.

*அஞ்செழுத்தும் அண்ணலருள் ஆன்மாத் திரோதமலம்*
*மிஞ்சி நமத்துரந்து மெய்யருள் வாத் — தஞ்சச்*
*சிகாரத்தில் ய வ்வைவிடுந் தீதிலா இன்பப்*
*புகாரிற் புகுந்தருந்தப் போய்.* (82)

(இ—ள்) சிவயநம என்னும் ஐந்தெழுத்தும் முறையே இறைவனும், அருளும், ஆன்மாவும், திரோதாயியும், ஆணவ மலமுமாம். வீடுபேற்றை விரும்புவோர் நமசிவய எனத் திரோதமலம் முற்பட உச்சரியாது சிவயநம என உச்சரிக்க. அங்ஙனம் செய்வாரை அருளாகிய வகரம் உயிர்க்குக் களைகணை சிகரத்தில் சேர்க்கும். சேர்ந்து இன்பக் கடலிற் புகுந்து திளைப்பாயாக. (எ—று)

திரோதாயியும் மலமும் முற்பட உச்சரிப்பாரை அவை பிறப்பிறப்பிற் செலுத்திச் சுழற்றுவதான் இம்முறை தெரித்தோதினர் என்க.

## குருத்துதி.

*பற்றிநின்ற பாசம் பறித்தகல வேவிழித்திட்*
*டுற்றஉயிர் காட்டி உணர்வுணர்த்தி — மற்றுஞ்*
*சிவப்பேறு தந்து சிவபோக வாரி*
*புகப்பே றளித்தவரைப் போற்று.* (83)

(இ—ள்) இங்ஙனம் எய்தற்கரிய பேற்றை அளிப்பித்த குருநாதனை எஞ்ஞான்றும் வழிபடுக. (எ—று)

### சீடரிலக்கணம்.

*இரவு பகல்நிழல்போல் இட்டபணி செய்து*
*குரவர்புகழ் வாயாரக் கூறித் — திருமுன்*
*விழுந்துவிழி நீர்பொழிய மெய்விதிர்த்து நின்று*
*தொழுந்தவத்தோர் காணுஞ் சுகர்.* (84)

(இ—ள்) இன்ன தவத்தையுடைய சீடரே முத்தியின்பம் பெறுதற்குரியார். (எ—று)

### முத்தனுக்கு முத்தியின்மை கூறல்.

*ஆகமுதல் நீங்கி அருளிற் கலந்துசிவ*
*போகம் விளையப் புணர்ந்தாலும் — வேகத்*
*தெரிவாய் நிரயத் திருப்பர் குருசொற்*
*பிரிவார் உலகிற் பிரிந்து.* (85)

(இ—ள்) குருசொற் பிழைப்பார் எத்துணைப் பெரியர் ஆயினும் எரிவாய் நிரயத்துட்பட்டு வருந்துதலேயன்றிப் பிறப்பிறப்பிலும் கிடந்துழல்வர். (எ—று)

### குரு வழிபாடே பொருளெனக் கூறல்.

*ஆகம் உயிர்பொருள்கொண் டன்றே அருள்அளித்துச்*
*சோகமெனப் பாவிக்கச் சொன்னரைத் — தாகத்தோர்*
*வேண்டும் பொழுதெல்லாம் வேண்டுபொருள் வந்ததுபோற்*
*பூண்டுதொழ லன்றோ பொருள்.* (86)

(இ—ள்) உடல் பொருள் ஆவி மூன்றையும் ஆட்கொள்ளும் ஞான்று சீடன்பாற் கொண்டு அதற்கு மாறாகக் கருணையையுதவிச் சோகம் பாவனை செய்யச்சொன்ன ஞானாசாரியரை, கெடுத்துத் தேடும் கலத்தை எடுத்துக்கொள்வார்க்கு வரும் உவகையோடு தொழற்பாற்று. (எ—று)

## திருமேனியருமை கூறல்

*அன்றுமுத லாகவே ஆருயிர்கட் காருயிராய்*
*நின்றருளும் தம்பிரான் நீங்காமல் — என்றும்*
*கருவாய்ப் பிறப்பைக் கழற்றினரோ தாமே*
*குருவாய் அருளாமற் கூறு.* (87)

தம்பிரான் அகண்ட பூரணமாய் நிற்கிற நிலையிலும் குரு சொரூபமாக எழுந்தருளிவந்த திருமேனி அருமை கூறல்.

**(இ—ள்)** உயிருக்குயிராம் இறைவன் மானிடச்சட்டை சாத்திவந்து உணர்த்தக் கருவழிப் பிழைத்தாருள் அன்றி அங்ஙனம் உணர்த்தாதபோது கருவொடு பொருந்தி வரும் பிறப்பை நீங்கினாரில்லை. ஆகலான், அங்ஙனம் போந்துணர்த்திய இறைவன் திருமேனியே என்றுந் தொழுந்தகையது. (எ—று)

## குருவே சிவமென்றல்.

*பாசம் பசுபதியைப் பாரித்துப் பார்த்தனரே*
*ஆசில் அகலறிவாய் ஆங்ககன்று — பேசரிய*
*ஆனந்தம் பெற்றார் அருட்குருவே ஈசனென்பர்*
*மோனமே முற்றும் முயன்று.* (88)

**(இ—ள்)** பதி பசு பாச இலக்கணங்களை உண்மையான் விளங்க அறிந்து அதனால் அறிவு விரிந்து பேரின்பம் பெற்ற பெரியோரும் குருவே ஈசன் என்றுரைப்பர் என்க. (எ—று)

## குருபணி செய்வாரை வழிபடுதல்.

*கருவேலை தன்னைக் கடப்பர் உலகில்*
*மருவாத இன்பத்துள் வைத்த — குருவின்*
*அடியார் அடியார் அடியார் அடியார்*
*அடியாரைச் சார்ந்த அவர்.* (89)

(இ-ள்) மருவுதலரிய இன்பத்தை எய்துவித்த குருவினடியாரது அடியாரது அடியாரது அடியாரது அடியாரைச் சார்ந்தார்க்கும் பிறவிப் பெருங்கடலைக் கடத்தல் கூடும். (எ—று)

## யோகம்.

*சன்மார்க்கம் ஈதாம் சகமார்க்கம் சாற்றுங்கால்*
*பன்மார்க்கம் வாயுப் பகர்கருவி — தன்மார்க்கஞ்*
*சால ஒடுக்கித் தடுத்து வளியிரண்டும்*
*மாலறவே நிற்கை மகிழ்ந்து.* (90)

*அந்த மனத்தாலே ஆதாரம் ஆறினையும்*
*சந்தித் ததிற்பொருள்கள் தான் அறிந்திட் — டிந்துவிலே*
*ஓவா ஒளிவைத் தருகும்அமு துள்நிறைக்கில்*
*ஓவா ஒளியாம் உரு.* (91)

*நின்ற ஒளியுருவின் நீங்காமல் நிற்கவே*
*என்றும் அழியாமல் இன்புற்றுக் — கொன்றையந்தார்த்*
*தாணுவுரும் போலேபின் சாரூப் பியத்திலே*
*மாணவக வாழ்வாய்காண் மற்று* (92)

இம்மூன்று செய்யுட்களும் ஒரு தொடர்.

(இ-ள்) முற்கூறியனவே சன்மார்க்கம் எனப்படுவது. இனி, சகமார்க்கமாவது இறைவனது அருவத் திருமேனியை அகத்தொழிலில் விசேடத்தாற்கண்டு வழிபடுதலேயாம், (எ—று)

சன்மார்க்கம் எனினும் ஞானம் எனினும் ஒக்கும். சகமார்க்கம் - யோகம். இதனால் எய்தும் பயன் சாருப்பிய முத்தியாம். இவற்றின் பரப்பெல்லாம் சித்தியாரிற் கண்டுகொள்க.

ஆறுதாரம் - மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்பன.

## கிரியை.

புத்திர மார்க்கம் புகைஒளி மஞ்சனம்பூ
வைத்தமுது தாம்பூலம் மற்றெவையும் — உத்தமமாய்த்
தேடிவைத்துப் பின்னைச் சிவபூசை செய்வதற்கு
நாடவத்திற் செல்லாமல் நாள். (93)

சுத்திஐந்து செய்து துகள்தீரும் மந்திரத்தால்
அத்தமது பத்துமுகம் ஐந்தாக — வைத்துவைத்து
வித்தியா தேகம் விதிப்படியிற் ரூபித்துப்
பத்தியால் மேனிதனைப் பார் (94)

பார்த்ததிரு மேனிப் படிகந் தனிற்பரனைக்
கோத்ததிரு மந்திரத்தாற் கொண்டுவந்து — பார்த்தருளச்
சொல்லிப் பராக்கறுத்துச் சோதிச் சிவாகமத்தின்
சொல்லிற் படியே தொடங்கு (95)

சோராமற் பூசித்துச் சொன்னபடி நில்இதழித்
தாரார் சமீபத்தில் தான்இருந்து — வாராமல்
தானே பரன்அளிக்குஞ் சங்கரனார் இம்முத்தி
தானே தரினுந் தரும். (96)

இந்நான்கு செய்யுட்களும் ஒரு தொடர்.

(இ—ள்) கிரியை எனப்படும் புத்திரமார்க்கம் மேற்கூறிய வாற்றான் அருவத் திருமேனியை நோக்கி அகத்தொழிலானும் புறத்தொழிலானும் செய்யும் வழிபாடாம். இந்நிலை நிற்போர் எய்துவது சாமீப்பிய முத்தியாம் என்க. (எ—று)

சுத்தி ஐந்து - முன் விரித்துள்ள பூதசுத்தி முதலான ஐந்தும்.

## சரியை.

தாதமார்க் கஞ்சாற்றிற் சங்கரனார் இன்புற்ற
பூதி திருவேடம் போற்றியே — நீதியினாற்
பூங்கா வனஞ்சமைத்துப் பூமாலை புண்ணியற்குப்
பாங்காகச் செய்கை பரிந்து. (97)

அலகு திருமெழுக்கிட் டாலயத்தில் அன்பாய்
இலகு திருவிளக்கும் ஏற்றிப் — பலகாலும்
சென்று வணங்கித் திருவடிவா ரஞ்சேர்த்தி
நின்றிடுகை தொண்டர்பணி நேர். (98)

ருவினடி
சார்ந்
று)

கொன்றையந்தார் வேணியற்குக் கோயில் பலசமைத்துப்
பொன்றியவை முற்றும் புதுக்குவித்து — நின்றூர்
அவலோகந் தன்னில் அடையார் அடைவர்
சிவலோகந் தன்னிற் சிறந்து. (99)

இம்மூன்று செய்யுட்களும் ஒரு தொடர்.

**(இ-ள்)** இங்ஙனம் புறத்தொழின் மாத்திரையானே உருவத் திருமேனியிற் செய்யப்படுவது சரியை எனப்படும் தாதமார்க்கமாம். இதனுன் எய்துவது சாலோக முத்தியாம் என்க. (எ—று)

இன்னும் இவற்றின் விரிவெல்லாம் சித்தியார் முதலிய நூல்களிற் கண்டு தெளிக.

அந்த மலம்அறுத்திங் கான்மாவைக் காட்டியதற்
கந்த அறிவை அறிவித்தங் — கந்தறிவை
மாறாமல் மாற்றி மருவுசிவப் பேறென்றுங்
கூறாமற் கூறக் கொடி. (100)

**(இ-ள்)** தொன்மையே யுடன்மருவிய ஆணவமலத்தைப் போக்கி, ஆன்மாவுக்குக் குடத்துள் விளக்குப்போன் மறைக்கப்பட்டிருந்த அறிவுச் சுடர் கொளுவி, அவ்வறிவையும் அதற்கு அறிவித்துப், பின் இப்பசுவறிவையும் மாற்றிச், சிவப்பேறு என்னும் பேரின்ப வெள்ளத்தின்கண் திளைப்பித்து நுகர்வித்தலே இந்நூற்பயனும் என்க. (எ—று)

துகளறுபோதம் மூலமும் பொழிப்புரையும் முற்றின.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்டதேவர் திருவடி வாழ்க.

ஸ்ரீ நடராஜா பிரஸ், கும்பகோணம்.